# அறிவித்தல் இல. R/2025/18

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள அரச வைத்தியசாலைகளில் துணை மருத்துவ சேவை பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு - 2025

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் NP/04/01/Out.Source.Appt/Gen ம் இலக்க 2025.07.04, 2025.10.22, மற்றும் 2025.11.14ம் ஆம் திகதிய கடிதங்கள் மற்றும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/NPC/A8/Approval/2025/014ம் இலக்க 2025.09.24ம் திகதிய அனுமதி ஆகியவற்றுக்கமைவாக, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் வரும் அரச வைத்தியசாலைகளில், துணை மருத்துவ சேவை பதவிகளில் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆறு (06) பதவியணிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இதற்கமைய, இவ்விளம்பரத்தில் பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட பொதுத் தகைமைகள் மற்றும் அவ்வவ் பதவிகளுக்குரியதான இணைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையுமுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். இவ் ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படவுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025.12.31** ஆகும்.

| பதவி இல. | பதவி | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்வதற்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை | பதவிக்குரிய இணைப்பு இலக்கம் |
|---|---|---|---|
| 01 | மருந்துக் கலவையாளர் (Dispenser) | 25 | I |
| 02 | இருதய துடிப்புப் பதிவாளர் (ECG Recordist) | 03 | II |
| 03 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT) | 04 | III |
| 04 | மருந்தாளர் (Pharmacist) | 06 | IV |
| 05 | பௌதீக சிகிச்சையாளர் (Physiotherapist) | 03 | V |
| 06 | கதிர்ப்படப்பிடிப்பாளர் (Radiographer) | 07 | VI |

### 01. பொதுத் தகைமைகள் (சகல பதவியணிகளுக்குமானது)

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. வட மாகாணத்தின் எந்தவொரு பாகத்திலும் கடமையாற்றக்கூடிய உடல் தகுதியினை கொண்டிருத்தல் வேண்டும்.

### 02. விண்ணப்ப கட்டணம் :-

விண்ணப்பதாரி, விண்ணப்ப கட்டணம் ரூபா. 500.00 ஐ வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்" என்ற பெயருக்கு யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில் மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் தேவைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 03. ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

(அ). ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ). செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச்சீட்டு (Passport)

(இ). செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் (Driving License )

## 04. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சட்டத்தரணி, சத்தியப்பிரமாண ஆணையாளர், சமாதான நீதவான், பிரசித்த நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா.854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவை உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 05. விண்ணப்பிக்கும் முறை

a. இவ்வறிவித்தலுடன் வெளியிடப்படும் விண்ணப்பப் படிவங்களில், தாம் விண்ணப்பிக்கும் பதவிக்குப் பொருத்தமான படிவத்தினை தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து, **விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: *393/48*, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

b. ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்குமென தனித்தனியான விண்ணப்பங்களையே சமர்ப்பித்தல் வேண்டும்.

c. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/190"** என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

.............................................

ஆழ்வாப்பிள்ளை சிறி,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2025.12.15*

ஆழ்வாப்பிள்ளை சிறி
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

இணைப்பு I

## 01. மருந்துக் கலவையாளர் (Dispenser)

1.1 சம்பளம் :- படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா 70,320.00 (MT-4 -2025) ஆகும்.

1.2. கல்வித் தகைமைகள் :-

i. க.பொ.த (சா/த) இல் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இல் இரசாயனவியல் பாடத்திற்கு திறமைச் சித்தி மற்றும் பௌதீகவியல் பாடத்திற்கு சாதாரண சித்தியுடன் உயிரியல் / இணைந்த கணிதம் ஆகியவற்றில் ஒன்றிற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

1.3. தொழில்சார் தகைமைகள்:-

i. சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட மருந்துக்கலவையாளர் தொடர்பான டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல்.

ii. இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழை கொண்டிருத்தல்

1.4. ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

1.5. ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

1.6. ஆட்சேர்ப்பு முறை :-

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய, ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |

## 02. இருதய துடிப்புப் பதிவாளர் (ECG Recordist)

2.1 **சம்பளம் :-** படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா 70,320.00 (MT-4 -2025) ஆகும்.

2.2. கல்வித் தகைமைகள் :-

i. க.பொ.த (சா/த) இல் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**அத்துடன்**

ii. க.பொ.த (உ/த) இல் உயிரியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் பாடத்திற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

2.3 தொழில்சார் தகைமைகள்:-

i. சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட இருதய துடிப்புப் பதிவாளர் தொடர்பான ஒருவருட முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல்.

iii. இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழை கொண்டிருத்தல்

2.4 ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2.5 ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

2.6 ஆட்சேர்ப்பு முறை :-

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய, ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |

## 03. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (MLT)

3.1. சம்பளம் :- படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா 71,920.00 (MT-6 -2025) ஆகும்.

3.2. கல்வித் தகைமைகள் :-

**(a)**

**i.** க.பொ.த (சா/த) இல் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

**ii.** க.பொ.த (உ/த) இல் இரசாயனவியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரு பாடங்களிற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

**iii.** **தொழில்சார் தகைமைகள்:-** சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தொடர்பான இருவருட முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல். (பல்கலைக்கழக பட்டம் இல்லாது மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு என்ற வகையில்)

**அல்லது**

**(b)**

**i.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் குறித்த பட்டம் பெற்றிருப்பின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றுவதற்கான இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழினை கொண்டிருத்தல்.

அத்துடன்

**ii.** சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதங்கள் கொண்ட அறிமுக மற்றும் இணைப்பு பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

**3.3.** ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.4. ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

3.5. ஆட்சேர்ப்பு முறை :-

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய, ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |

## 04. மருந்தாளர் (Pharmacist)

*4.1* சம்பளம் :- படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா 71,920.00 (MT–6–2025) ஆகும்.

*4.2* ***கல்வித் தகைமைகள் :-***

**(a)**

i. க.பொ.த (சா/த) இல் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இல் இரசாயனவியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரு பாடங்களிற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. **தொழில்சார் தகைமைகள்:-** சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட மருந்தாளர் தொடர்பான இருவருட முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல். (பல்கலைக்கழக பட்டம் இல்லாது மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு என்ற வகையில்)

**அல்லது**

**(b)**

**i.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் மருந்தாளர் / விஞ்ஞானமானி (மருந்தாளர்) பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் குறித்த பட்டம் பெற்றிருப்பின் மருந்தாளராக கடமையாற்றுவதற்கான இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழினை கொண்டிருத்தல்.

அத்துடன்

**ii.** சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதங்கள் கொண்ட அறிமுக மற்றும் இணைப்பு பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

4.3 ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.4 ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

*4.5* ஆட்சேர்ப்பு முறை :-

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய, ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |

இணைப்பு V

## 05. பௌதீக சிகிச்சையாளர் (Physiotherapist)

*5.1* சம்பளம் :- படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் படிகள் உள்ளங்கலாக ரூபா 71,920.00 (MT–6–2025) ஆகும்.

*5.2* **கல்வித் தகைமைகள் :-**

**(a)**

i. க.பொ.த (சா/த) இல் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இல் பௌதீகவியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரு பாடங்களிற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

iii. தொழில்சார் தகைமைகள்:- சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட பௌதீக சிகிச்சையாளர் தொடர்பான இருவருட முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல். (பல்கலைக்கழக பட்டம் இல்லாது மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பிற்கு)

**அல்லது**

**(b)**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் பௌதீக சிகிச்சையாளர் பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பின் பௌதீக சிகிச்சையாளர் கடமையாற்றுவதற்கான இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழினை கொண்டிருத்தல்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதங்கள் கொண்ட அறிமுக மற்றும் இணைப்பு பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

5.3. ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5.4. ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி **அல்லது** இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

*5.5 ஆட்சேர்ப்பு முறை :-*

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |

## 06. கதிர்ப்படப்பிடிப்பாளர் (Radiographer)

*6.1* சம்பளம் :- படிகள் உள்ளடங்கலாக இப்பதவிக்கான மாதாந்த சம்பளம் ரூபா 71,920.00 (MT–6–2025) ஆகும்.

*6.2* கல்வித் தகைமைகள் :-

**(a)**

**i.** க.பொ.த (சா/த) இல் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக ஏனைய ஒரு பாடத்திலும் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருப்பதுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

**ii.** க.பொ.த (உ/த) இல் பௌதீகவியல் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரு பாடங்களிற்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

**iii.** தொழில்சார் தகைமைகள்:- சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட கதிர்ப்படப்பிடிப்பாளர் தொடர்பான இருவருட முழுநேர டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல். (பல்கலைக்கழக பட்டம் இல்லாது மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு என்ற வகையில்)

**அல்லது**

**(b)**

**i.** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில் கதிர்ப்படப்பிடிப்பாளர் பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும். வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் குறித்த பட்டம் பெற்றிருப்பின் கதிர்ப்படப்பிடிப்பாளராக கடமையாற்றுவதற்கான இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழினை கொண்டிருத்தல்.

அத்துடன்

**iv.** சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதங்கள் கொண்ட அறிமுக மற்றும் இணைப்பு பயிற்சி நெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

6.3 ஒப்பந்த ஆட்சேர்ப்புக்கான வயதெல்லை:-

விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6.4 ஒப்பந்த காலப்பகுதி :-

நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி **அல்லது** இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரையான காலப்பகுதி ஆகியவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

6.5 ஆட்சேர்ப்பு முறை :-

பின்வரும் திட்ட அமைப்பில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி வரிசை ஒழுங்கின் (Merit Order) வெற்றிட எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்ப்பு எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

| பாட விபரம் | மணித்தியாலம் | சித்திப்புள்ளி |
|---|---|---|
| விடய அறிவு | 10 நிமிடங்கள் | 50 |